


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான சக்கரம்

வெவ்வேறு மதங்கள் இருக்கட்டும் அவை செழிக்கட்டும். ஆண்டவனின் மகிமை எல்லாப் பாஷைகளிலும் பலதரப்பட்ட இராகங்களிலும் பாடப்படட்டும். அது தான் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

- பாபா -

*வெளியீடு:*

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்,

யாழ்ப்பாணம்.

1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சாயிராம் புட்டபர்த்தியில்......

அன்று காலை பாபா தனது அறைக்குள் 7 பேரை அழைத்தார். அறையினுள் ஸ்வாமி திடீரென்று அமெரிக்க தம்பதிகள் பக்கம் திரும்பி, இது உங்கள் 33 ஆவது திருமண நாளல்லவா? என்று கேட்டார். அவர்கள் ஸ்தம்பித்து விட்டனர். அவர்கள் "ஆம்" என்று பதில் சொல்ல சில நிமிடங்கள் ஆயின. ஸ்வாமியின் உருவம் உள்ள ஒரு மோதிரத்தைப்படைத்து அதை அவளது நடுங்கும் உள்ளங்கை மீது வைத்து கணவனின் விரலில் அதை பொருத்துமாறு அவளிடம் கூறினார். மீண்டும் கையை அசைத்தார், **தங்கத் தாமரை** வடிவுடைய பென்ரன் இணைக்கப்பட்ட தங்கச் சங்கிலி ஒன்று வந்தது. அதை கணவனிடம் கொடுத்து அவளது கழுத்தில் அணிவிக்கும் படி கூறினார். அவர்களது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அந்த திருநாளின் உட் பொருளை ஸ்வாமி நினைவு படுத்துவார் என்று அத்தம்பதிகள் கனவில் கூட கருதியதில்லை. அவருடைய சாநித்யத்தில் அதை அவர்களே மறந்து விட்ட போது ஸ்வாமி மட்டும் எப்படி நினைவில் வைத்திருக்கிறார்! மறக்க முடியாத கோலாகலத்துடன் இப்போது ஸ்வாமி அதைக் கொண்டாடி விட்டார்.

பாபா விஞ்ஞானிகளிடம் "இதற்கு நீங்கள் அளிக்கும் விளக்கம் என்ன?" என்று கேட்டார். அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தனர் **"சூன்யத்திலிருந்து ஒன்றைப்படைக்க உங்கள் பௌதிக விஞ்ஞான விதிகள் அனுமதிப்பதில்லை. ஆனால் அந்த விதிகளின் விளையாட்டு என்னிடம் எடுபடுவதில்லை" என்றார் பாபா. அது எப்படி?** என்றனர் அவர்கள்.

அதீதமான ஆற்றல் மிக்க உருப் பெருக்கியால் கூட பார்க்க முடியாத ஒன்றை **ஆன்மீகக் கண்களால் பார்க்க முடியும்** ஆன்மீக அக நோக்கை நீங்கள் வளர்த்துக் கொள்ளலாம் . இப்படி ஒரு வாய்ப்பிருக்கிற தென்பதை வெளிப்படுத்தவும் அக ஆற்றலும் அமைதியும் மிக்க ஒரு புதிய உலகுக்கு வழி நடத்தவுமே நான் வந்திருக்கிறேன்.

- பாபா -

(சத்யம்-சிவம்-சுந்தரம். பாகம் - 4 பக்-295)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயி ராம்

# கணனியுக அவதாரம் காட்டும் ஆன்மீகம்

## பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
(தேசிய, சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி அமைப்பாளர்)

நாம் எல்லாருள்ளும் இருக்கும் தெய்வத் தன்மையை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் நமது மனத்தில் தோன்றியுள்ளது. 21 ஆம் நூற்றாண்டு வாழ்விற்கு அது ஓர் அவசிய தேவை என்பதை உணர்ந்து கொண்டோம். அந்த உணர்விலே உதித்த ஒரு முயற்சியே இந்த சிறு நூல். நீங்கள் இதைப் படிப்பதற்கு எடுத்ததற்கும் காரணம் அதுவே.

சந்தேகம் இல்லை, நாங்கள் பெரும் அதிர்ஷ்டசாலிகள். ஆன்மீக வாழ்வின் வழியை நமக்குக் காட்டுவதற்கு நம்மிடையே ஒரு தெய்வம் மனித உருவில் நடமாடுகிறார். கிருஷ்ணர், இராமர், யேசு தோன்றிய காலத்தில் வாழ்ந்த பாக்கியவான்கள் போல் நாமும் ஆனோம்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா, அவரின் கோடிக் கணக்கான பக்தர்களுக்கும் கடவுள். அவரை அறிந்த மற்றோருக்கு அவர் விஞ்ஞானம் விளக்க முடியாத அற்புதங்கள் புரியும் ஒருவர். அன்பின் வடிவங்களை எல்லா மதங்களிலிலும் இருந்து எடுத்துக் காட்டும் ஆன்மீகக் கல்விமான். பலர் இன்னும் அவரை அறியாமல் இருக்கின்றனர். அவர்கள் அவரை விரைவில் தெரிந்து கொள்வர். அப்படித் தெரியப்படுத்துவது நமது கடமை ஆகும். ஏனெனில் நாம் பெற்ற பேற்றை எல்லாரும் பெறவேண்டும்.

மிகச் சாதாரண மனிதராகிய நாம், ஆரம்பத்தில் அவரின் அற்புதங்களையும் அதிசய சாதனைகளையும் கேட்டு அறிந்தே அவர்பால் ஈர்க்கப்படுகிறோம். சிலர் கல்விமான்கள், விஞ்ஞானிகள், மனோவியல் உளவியல் நிபுணர்கள் ஆகியோர் அந்த அற்புதங்களைப் பரிசோதிக்கச் சென்று முடிவில் அவரின் பாத நமஸ்காரம் வேண்டி நின்றனர். அவரைக் கண்களால் காணும் தர்சன பாக்கியமே போதும் என்று மந்திரிகள் உப வேந்தர்கள், மருத்துவ நிபுணர்கள், கலைஞர்கள் ஆகியோர் புட்டபர்த்தி சென்று பார்த்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தான் பல மொழிகளில் அவரைப் பற்றி **அன்புத் தெய்வம்** (கஸ்தூரி), **சாயி பாபா அவதாரம்** (ஹவர்ட் ம.்.பட்), **கடவுளை காண்கிறோம்** (சார்ல்ஸ் பென்), **என்பாபாவும் நானும்** (ஜோன் ஹிஸ்லொப்) என்றெல்லாம் சத்திய ஆணையுடன் நூல்கள் எழுதினர். அந்த நூல்கள், பல நாடுகளில் ஆயிரக் கணக்கான வாசகர்களை வசீகரித்து பாபாவின் ஆன்மீக வழியைப் பின்பற்ற வைத்தன.

அந்த நூல்களையும், பகவானின் போதனைகள் அடங்கிய நூல்களையும் படிக்கும் போது, பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அற்புதங்கள், அவர் கூறுவது போல், அன்பின் சிறு அடையாளங்களே என்று உணர்கிறோம். பகவானின் போதனைகளில் உள்ள அறிவுரைகளும், அவர் வாழ்வும் செயல்களும் தான் நமது காலத்தின் மிகப் பெரிய சக்தி வாய்ந்த அற்புதம் என்பதை ஒத்துக் கொள்கிறோம்.

அத்துடன், மனித உருவில் நடமாடும் அவர், **எல்லாம் தெரிந்தவர், எங்கும் உள்ளவர், எல்லாம் வல்லவர்** என்று அறியும் போது, நாம் பேரானந்தமும், ஆழ்ந்த நம்பிக்கையும் சாந்தியும் அடைகிறோம். இனி, ஆபத்தான வேளைகளிலும் மிகவும் வேண்டிய நேரங்களிலும் அவரின் முதல் உதவி ஏதோ ஒரு கை மூலம், ஏதோ ஒரு வகையில் தமக்குக் கிடைத்ததை [redacted] சாயி பக்தர்கள் அநுபவித்திருக்கிறார்கள். மிக அந்தரங்கமான அன்பின் கருணை அவை.

பகவானின் கருணையைப் **பூரணமாகப்** பெறுவதற்கு ஒரே வழி அவரின் போதனைகளின் படி வாழ்வதுதான். "**எனது வாழ்வு தான் எனது போதனை**" என்று பாபா அன்று சொன்னார். எத்தகைய வாழ்வு அது? சாயியின் வாழ்வு, சாயியின் போதனை, சாயியின் இலட்சியங்கள், சாயி உலகிற்குக் கற்பிக்கும் பாடம் எல்லாம் ஒரே சொல்லில் அடங்கும்: **அன்பு.** பகவான் சுருக்கமாகக் கூறும் மனித மேம்பாடுகள் ஐந்து - **சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை (அன்பு), அகிம்சை.** இவற்றின் உயிரோட்டம் அன்புதான். **அன்பு** எண்ணத்திலும் சொல்லிலும் **சத்தியம்** ஆகிறது, செயலில் **தர்மம்** ஆகிறது, இவை தரும் மன அமைதிதான் **சாந்தி.** இந்த நிலையில் எல்லா உயிரும் ஒன்றாகும். இன்பமும் துன்பமும் சமமாகும். மனித குலத்தையோ, மதத்தையோ, மொழியையோ வேறுபடுத்தாத பரிபூரண சத் சித் ஆனந்த நடுநிலைதான் **அகிம்சை** ஆகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சாயி மார்க்கம் ஒரு புதிய மதத்தை தோற்றுவிப்பது இல்லை. ஏதோ ஒரு மதத்தின் புதிய உருவமும் அல்ல. சாயி வழியின் ஆன்மீக அர்த்தம் பின் வருமாறு.

*ஒரே ஒரு குலம், அது மனித குலம்*
*ஒரே ஒரு மதம், அது அன்பு என்ற மதம்*
*ஒரே ஒரு மொழி, அது இதயத்தின் மொழி*
*ஒரே ஒரு கடவுள், அவர் எங்கும் உள்ளார்.*

பகவான் சத்திய சாயி பாபாவின் சத் சங்கத்திலும், நிறுவனத்திலும் நாம் சேரும் போதும், சாயி தத்துவத்தை நாம் உணரும் போதும் நாம் நமது மதத்திலிருந்து மாறுவதில்லை. மாறாக ஒரு இந்து மேலும் நல்ல இந்து ஆகின்றான். ஒரு கிறிஸ்தவர் சிறந்த கிறிஸ்தவராக அவ்வண்ணமே புத்த சமயத்தவர் வேறு சமயத்தவர் ஆகியோர் தமது சமயக் கோட்பாடுகளை திறமையாக கடைப்பிடிக்கின்றனர். சாயி போதனைகள் அன்பின் அடிப்படையில் ஆன்மீக மன விருத்தி செய்வதாலேயே, புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் எல்லா மதத்தினரும் ஒன்றாகக் கூடுகின்றனர். பகவான் பேசும் போது கீதை, பைபிள், தம்மபதம் என்று வெவ்வேறு மதத்தினர் தமது நூல்களின் ஓசைகளைக் கேட்கின்றனர்.

பகவான் இன்று கூறுகின்றார் **"உங்கள் வாழ்வுதான் எனது போதனை."** என்று. அத்தகைய வாழ்வைத்தான் பகவான் எதிர்பார்க்கின்றார். இந்தவாழ்வு ஆன்மீகம், கல்வி, சேவை என்பதன் இணைப்பில் மலர்வதாகும். பகவான் ஆன்மீகக் கருத்துக்களை மிகவும் இலகுவான முறையில் தந்திருக்கிறார். அன்பின் அடிப்படையில் சேவை, ஆசைகளைக் கட்டுப்படுத்துதல், எண்ணம்-சொல்-செயல் இவற்றின் ஒற்றுமை, நாமம், ஜெபம், பஜனை, தியானம் மூலம் சாதனை என்று பகவான் ஆன்மீக வாழ்விற்கு வழி காட்டுகின்றார். இந்த வாழ்வில் தன்னலமற்ற சேவை முதன்மையானது. அத்துடன் சேவை ஈகோ என்ற அகங்காரத்தை அழித்து ஆன்மீக ஒளிக்கு இடம் தருகிறது.

பகவானின் கல்விப் புரட்சியை உலகம் போற்றுகிறது. பகவானின் பக்தர்களின் பிள்ளைகளுக்கு பால விகாஸ் கல்வி, எல்லோரின் பிள்ளைகளுக்கு மனித மேம்பாட்டுக் கல்வி என்ற அடிப்படையில் பகவானின் கல்வித் தத்துவம் உலக நாடுகளில் வேரூன்றிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் எல்லாப் பாடசாலைகளிலும் இந்த ஆண்டில் (1998) முதலாம் ஆண்டு மாணவருக்கு **சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியை** ஆரம்பிப்பதற்கு கல்வி அதிகாரிகளின் ஒப்புதல் மட்டுமல்ல அனுசரணையும் கிடைத்துள்ளது. இந்த நிலையில் ஆண்டு ஒன்று கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு இந்தக் கல்வித் தத்துவத்தையும் முறையையும் விளக்கும் கடமை ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்திற்கு உண்டு.

அதன் வெற்றிக்கு பகவானின் ஆசி எமக்கு உண்டு. இந்தக் கல்விப் புரட்சியில் கல்விமான்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றார், பிள்ளைகளின் இனத்தவர் அயலவர் பங்குபற்றுவதன் மூலம் பகவானின் கருணையைப் பெறுவர்.

**பகவான் கூறுவது, கல்வியின் நோக்கம் ஒழுக்கம்** என்று. 20 ஆம் நூற்றாண்டு விஞ்ஞான அறிவிலும் சாதனையிலும் அதீத முன்னேற்றம் கண்டது. 20 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானி ஐன்ஸ்டைன் கூறுகிறார்.

*"விஞ்ஞானம் இல்லாத சமயம் - நொண்டி*
*சமயம் இல்லாத விஞ்ஞானம் - குருடு.*

20 ஆம் நூற்றாண்டில் சமயம் ஆன்மீக நோக்கை இழந்தது. ஒழுக்கம் சிதைந்தது. நாகரிகம் அர்த்தம் கெட்டது. மனித குலம் மனச்சாட்சி இழந்தது. உலகின் அழிவு என்று நொஸ்ரடாமஸ் கூறியதன் அர்த்தம் இது தான். இப்படியான யுக வேளைகளில் தான் அவதாரங்கள் அவதரிக்கின்றன. அறிஞர், பகவான் பாபாவின் அவதாரத்தை கண்டு கொண்டதில் வியப்பில்லை. எதிர்பார்த்தது நடந்தது.

ஆன்மீகக் கல்வி 21 ஆம் நூற்றாண்டின் ஆணி வேர் எதிர்கால விஞ்ஞானத்தின் கண். மனித குலத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரே கருவி. இந்தக் கருவியின் செயற்பாடு நமது இளைய சமுதாயத்தின் கைகளில் உள்ளது. உங்கள் கைகளில் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதங்கள் – அறிமுக அழைப்பு

"அற்புதங்கள் தெய்வீகத்திற்கு சாட்சியே தவிர, தெய்வீகத்தை நிரூபிப்பதற்காக நிகழ்த்தப்படவில்லை" என்றார் பாபா. "அன்பு என்னை அளிக்கும் படி தூண்டுகிறது. நான் அளிக்க விரும்பும் போது அந்தப் பொருள் தயாராகிறது" என்றார் பாபா.

புவியியல் நிபுணரான டாக்டர் ஒய். ஜே. ராவ், எம். எஸ். ஸி. பி. ஹெச். டி என்பவர் பிரசாந்தி நிலையத்துக்கு வந்திருந்தார். ஒரு நாள் பாபா அவரோடு பேசிக் கொண்டே நடந்து போய்க் கொண்டிருக்கும் போது அங்கே உடைந்து கிடந்த சொரசொரப்பான கைப்பிடியளவுள்ள ஒரு சிறு கல்லைக் கையில் எடுத்துக் கொண்டார். அதனை டாக்டர் ராவிடம் காட்டி இதனுள் அடங்கியுள்ளவை யாவை?" எனக் கேட்டார் பாபா. தனக்குப் புவியியலை விபரிக்கும் ஆனந்தத்தோடு அந்தக்கல் சம்பந்தமான பதிலைக் கூறினார். அதனுடைய கூட்டுப் பொருட்கள் பற்றிய நுண்ணிய விபரங்களை பாபா கூறும்படி கேட்டார். டாக்டர் ராவ் அதற்குத் தயாராகவே இருந்தார். அணுக்கள், இரசாயனப் பொருட்கள், எலக்ட்ரோன்கள், புரோட்டன், மெசான் என்று விஞ்ஞான பரிபாஷையில் உள்ள பல சொற்களையும் பற்றி கூற ஆரம்பித்தார்.

பாபா அந்தக் கல்லைத் தம் கையில் எடுத்துக் கொண்டு அதன்மேல் ஊதினார். அந்தக்கல் குழலூதும் கண்ணனின் அழகுமிக்க சிலையாக மாறியது. அதனுடைய நிறம் மங்கிய நீல வண்ணமாக இருந்தது. சிலையின் அமைப்புக்குத் தக்கபடி, கல்லின் அமைப்பிலும் சிறிது மாற்றம் ஏற்பட்டிருந்தது. "பார் இந்தக் கல்லில் இறைவன் இருக்கிறார். புவியியல் நிபுணர்களான நீங்கள் இதனை நினைவில் கொள்ள வேண்டும். எல்லாவற்றிலும் இறைவன் நிறைந்திருக்கிறார். அவர் இல்லாத பொருள் உலகில் எதுவும் இல்லை" என்றார் பாபா.

சத்தியம்-சிவம்-சுந்தரம்
பாகம் III
பக்கம் 347.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்மபுராணத்தில் ஒரு குறிப்பு வந்திருக்கிறது!

பர்த்தி என்ற கிராமத்தில் சத்யா என்ற பெயருடன் 5 அடி 3 அங்குலம் உயரத்துடன் கூடிய ஒருவர் பிறப்பார் என்ற உண்மை அதில் காணப்படுகிறது. இந்த பிரபஞ்சத்தையே கவர்ந்திழுக்கக் கூடிய பெரிய "magnet" காந்தசக்தி உடையவர் என்றும் எழுதியிருக்கிறது.

(ஆதாரம்: சனாதன சாரதி ஜனவரி 1998)

## 25-12-96 கிறிஸ்மஸ் தினத்தன்று பகவான் ஆற்றிய அருளுரை

**ஒருவரே கடவுள்:**

உலகியலான, பௌதிக வாழ்க்கை நிலையற்றது. இளமை, உலகியலான செல்வங்கள் எல்லாம் நகர்ந்து செல்லும் மேகங்களைப் போன்றவை. கணநேரத்தில் மறைந்து விடும். மனைவி, பிள்ளைகள், பந்துக்கள் இவர்களும் கூட மூடுபனி போல் சட்டென்று மறைந்து விடக்கூடியவர்கள். (மின்னலைப் போல என, பகவான் திருத்தியதும் பலத்த கரவொலி)

மனிதவாழ்க்கையில் சத்யமான நடத்தை, சத்கீர்த்தி இவை இரண்டும் நிரந்தரமானவை. இவ்வுலகில், மனித வாழ்க்கையைச் சீரமைக்கவும், திருத்தி வழிநடத்தவும் பல மதங்கள் உருவாயின. வைணவர்கள் விஷ்ணுவே மிகப்பெரியவர் எனவும், சைவர்கள் சிவபெருமானே உயர்ந்தவர் எனவும் உயர்த்திப் பேசுகின்றனர். காணாபத்யம் என்கிற வழி நடப்பவர் அனைவரும் கணபதியே முழுமுதற்கடவுள் எனப் போற்றுகின்றனர். நன்கு படித்தவர் எல்லோரும் வித்யைக்கு அதிபதியான சாரதா தேவியே சிறந்தவள் எனக்கூறுகின்றனர். இஸ்லாமியர்கள் அல்லாவே அனைவரினும் பெரியவர் என உயர்த்திக் கூற, கிறிஸ்தவர்கள் ஏசுகிறிஸ்து மட்டுமே ஒரே கடவுள் எனக் கொண்டாடுகின்றனர். புத்தரே சிறந்தவர் என பௌத்தர்களும், மகாவீரரே உயர்ந்தவர் என ஜைனர்களும் வழிபடுகின்றனர். பார்ஸிகளுக்கு ஜொராஷ்டிரர் உயர்ந்தவர் என்றால் சீக்கியருக்கு உயர்ந்தவர் குருநானக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபாவின் பக்தர்கள் அனைவரும் உரத்துக் கூறுவது சாயிபாபா தான் கடவுள்! (பலத்த கரவொலி), ஆனால் அனைவரும் சமமே! எல்லா மதங்களுக்கும் பொதுவானவர் கடவுள்!

அவரே சாந்தி மிகுந்தவர்! அவரே தர்மம்! அவரே சத்யம்! அவரே அன்பு மயமானவர்!

***மதங்கள்:***

மனித வாழ்க்கையில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து, அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி தலைசிறந்த சமுதாயமாக மாற்றுவதே மதங்களின் நோக்கம் என்கிற சத்தியத்தை உணர்ந்து, புரிந்து கொள்வது ஒவ்வொருவரின் கடமையுமாகும். அனைத்து மதங்களின் சாரமும், அனைத்துப் புனித நூல்களின் மூலமும், அனைவரும் கடைசியில் அடைய வேண்டிய இலக்கு ஒன்றே! ஆனால் மனிதன் தன் சுயநலத்தினாலும், குறுகிய நோக்கினாலும், மதத்தைக் கருவியாகக் கொண்டு கலகத்திலும், சண்டைகளிலும் ஈடுபடுகிறான்.

எல்லா மதங்களும், நல்லவற்றையே போதிக்கின்றன நாம்தான் நல்லறிவுடன் நடந்து கொள்ள வேண்டும். நம் மனம் நல்லதாய் இருந்தால் எந்த மதம் தீமை மிகுந்தது? பாரதத்தின் வீரப்புதல்வர்களே! இதை உன்னிப்பாகக் கேளுங்கள்!

எல்லாமதங்களுக்கும் ஆதாரமான முக்கிய தத்துவங்கள் ஒழுக்கம், தானம், தர்மம், சத்யம், பாரம்பரியக் கலாசாரம், சகிப்புத்தன்மை, மற்றும் அகிம்சை முதலானவை. இத்தகைய உண்மைகளை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றன. ஆனால் பண்டைக் காலத்திலிருந்தே இந்த ஒற்றுமைகளை மறந்து விட்டு வேறுபாடுகளையே நினைத்து மதங்கள் வளர்ந்து வந்திருப்பதால் மனித வாழ்க்கையில், தெய்வீகத்தில் இருக்கும் ஒற்றுமையைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது.

(சனாதன சாரதி மாசி 1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தப் பெயரில் அழைத்தாலும் நான் வருவேன்.

1943 இல் இந்தியாவில் நடைபெற்றது.

ஸ்ரீ கே. ஆர். கே. பட்டின் என்பவருடைய குலதெய்வம் சுப்பிரமணிய சுவாமி (முருகன்). நீண்ட காலமாக அவரது மனைவி தினமும் முருகக்கடவுளுக்கு சாஸ்திரப்படி பூஜை செய்து வருகின்றவர்.

1943 இல் ஸ்ரீமதி பட்டுக்குக் கருப்பையில் புற்று நோய் கண்டது. டாக்டர்கள் ஆபரேசன் செய்ய வேண்டும் என்றனர். அது வெற்றியாகுமா? என உத்தரவாதம் தருவதற்கில்லாவிடினும், ஸ்ரீ பட்டிடம் அவரது தாயார் “முருகன் தான் உன் அப்பாவின் கான்சரை ஆபரேஷன் இல்லாமலே குணமாக்கினார் அதே மாதிரி இவளையும் சுகப்படுத்துவார்” என்றார்.

அம் மூதாட்டியின் அபார நம்பிக்கையில், அப்போது இளமையாயிருந்த பட் தம்பதி ரணசிகிச்சை யோசனையைக் கைவிட்டு, குல தெய்வத்தின் கையிலேயே தங்களை ஒப்புவித்துக் கொண்டனர். பூஜை வலுத்தது. நியம ஆசாரங்கள் கடுமையாயின. பிராத்தனைகள் முன்னிலும் மனமார, முன்னிலும் நீண்ட நேரம் செலுத்தப்பட்டன. ஸ்ரீமதி பட் படுக்கையில் இருந்ததால் இவரது மாமியாரே தான் முக்கியமாக பூஜைகள் செய்தார். இப்படி இரு மாதங்கள் ஓடின நோயாளியோ நாளுக்கு நாள் மெலிந்து நலிந்து வந்தார்.

ஓரிரவு அவர் அரைத்தூக்க நிலையில் இருந்த போது ஒரு பெரிய நாகம் தன் படுக்கையைச் சுற்றி வளைத்துக் கொள்வதை மங்கலான ஒளியில் கண்டார். துணுக்குற்று விளக்கைப் போட்டார். அதே அறையில் உறங்கிக் கொண்டிருந்த மாமியாரை எழுப்பினார் (பட் அப்போது தொழில் நிமித்தம் வெளியூர் சென்றிருந்தார்.) பாம்பு எதையும் காணோம். விளக்கை அணைத்துப் படுத்தனர்.

மறுபடி ஸ்ரீமதியின் கண்ணுக்கு படுக்கையைப் பாம்பு சுற்றிக் கொள்வதாகத் தெரிந்தது. உடனேயே அந்த நாகம் முருகனாக உருவம் கொண்டது. அவருக்கு மேலே முருகன் காற்றில் மிதப்பது போலிருந்தது. பிறகு அவன் வேலாயுதத்தால் அவளுடைய உடலில் குத்தி, அவளை தன்னிடம் இழுத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, ஓர் உயர்ந்த மலைச் சிகரத்தில் முருகன் முன் தான் நிற்பதாக உணர்கிறார் ஸ்ரீமதி பட். குனிந்து அவனது பாதங்களை தமது கைகளாலும், தன் தலையாலும் தொடுகிறார். முருகன் பேசுகிறான். ஸ்ரீமதி பட் தன்னுடனேயே இருக்கப் பிரியப்படுகிறாரா? அல்லது உலகுக்குத் திரும்ப விரும்புகிறாரா? என வினவுகிறான். வாழ்கிறாயா? சாகிறாயா? என்பதே அதன் பொருள் என்று ஸ்ரீமதி புரிந்து கொள்கிறார். கணவரையும் குழந்தைகளையும், அவர்களுக்குத் தமது தேவைகளையும் நினைக்கிறார். திரும்பிப்போகவே விரும்புவதாகச் சொல்கிறார்.

முருகன் "உனக்கு நோய் குணமாகிவிட்டது. விரைவிலேயே பலம் பெறுவாய். உன் வாழ்நாள் முழுவதும் நான் உன்னைக் காப்பேன். நீ எப்போது என்னை எண்ணினாலும் நான் உடன் இருப்பேன். இப்போது திரும்பிப்போகலாம்" என கூறுகிறான்.

"போகிற வழி எது?" என்கிறார் ஸ்ரீமதி. அவர்களது காலடியிலேயே கீழ் நோக்கிச் செல்லும் ஒரு குறுகலான வளைசல் படி வரிசை உண்டாகிறது. அதைச் சுட்டிக் காட்டுகிறான் முருகன். ஸ்ரீமதி பட் அதில் இறங்கத் தொடங்குகிறார்.

உணர்வு தடைப்படுகிறது.

தமது அறைப்படுக்கையிலேயே கிடப்பதை உணர்கிறார். மாமியாரை எழுப்பி அந்த திவ்விய அனுபவத்தைக் கூறினார். கணவர் திரும்பிய பின் அவரிடமும் கூறினார். மிகப் புனிதமான இவ்வனுபவம் அக்குடும்பத்தினரைத் தவிர எவருக்கும் பகிரங்கப்படுத்தப் பெறவில்லை.

அன்றிரவிலிருந்தே அவரது புற்றுநோய் அதி வேகமாகக் குணமடையத் தொடங்கியது. விரைவிலேயே அதன் அறிகுறிகளும் மறைந்து, ஸ்ரீமதி பட் நல்ல தெம்பு பெற்று, தமது கசஜமான கடமைகளை ஆற்றத் தொடங்கிவிட்டார். ஒரு வித்தியாசம் வீட்டுக் கடமை, விரதங்கள் இவற்றோடு ஏழைகளுக்குச் சமுக சேவையும் செய்யலானார். சமுக சேவைக்காகவே இறைவன் தமக்குப் போன உயிரை மீட்டுக் கொடுத்தான் எனக்கருதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நடந்தபின் இருபதாண்டுகள் ஓடின. பட் தம்பதியினர் முதன்முறையாக சத்திய சாயி பாபாவைப் பற்றி கேள்வியுற்றுப் பிரசாந்தி நிலையம் சென்றனர்.

ஸ்ரீமதியிடம் சாயிபாபா, "ரொம்பக் காலம் முந்தி இருபது வருடத்துக்கு முந்தி - உன்னிடம் நான் பேசினேன்" என்றார்.

குழப்பமடைந்த அம்மாள் "இல்லை சுவாமி இதுதான் நான் முதன்முறை இங்கு வருவது" என்றார். "ஆமாம், ஆமாம். ஆனால் நானே நீ மைசூரில் இருந்த போது உன்னிடத்துக்கு வந்தேன்." என்ற பாபா, அவர் புற்று நோயுற்று வாழ்ந்த வீட்டு விலாசத்தை தெளிவுற மொழிந்தார்.

பிறகு பாபா ஸ்ரீமதி பட்டைத் தமது மாடி அறைக்குச் செல்லும் குறுகிய வளைசல் படி வரிசை வழியாக அழைத்துச் சென்றார். "கீழே பார்" என்றார்.

ஸ்ரீமதி பட் கீழே படி வரிசையைப் பார்த்ததும் பழைய நினைவு பளிச்சிட்டு விட்டது. இருபதாண்டுகளுக்கு முன் மலைச்சிகரத்தில் இருந்து முருகன் காட்டிய அதே படி வரிசை, தத்ரூபம் அதுவே!

முன்னெப்போதையும் விடப்பெரிய பிரமிப்பில் ஆழ்ந்தார் ஸ்ரீமதி பட்.

சுவாமி கையசைக்க, ஒரு சித்திரம் அந்தரத்தில் சிருஷ்டியாயிற்று. அந்தப் படத்திலே முருகனின் ஊர்தியில் (மயிலில்)பாபாவே அமர்ந்திருக்க, அவரைச் சுற்றி ஒரு நாகம் வளையமிட்டிருக்கிறது!

ஸ்ரீமதி பட்டுக்கு உண்மை பல பலவெனப்புலரலாயிற்று. சுப்பிரமணிய சத்திய சாயி பாபாவின் பாதத்தில் விழுந்து ஆனந்த பாஷ்யத்தைக் கொட்டினார்.

நன்றி
ஹொவர்ட் மர்ஃபெட்
ஸாயி பாபா அற்புதபுருஷர்.
(பக்கம் - 107)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்கள்

★ நான் எல்லோருடைய சேவகன். நீங்கள் என்ன பெயரிட்டு வேண்டுமானாலும் என்னை அழைக்கலாம். நான் பதிலளிப்பேன். எல்லாப் பெயர்களுமே என்னுடையவை. இன்னும் சொல்லப் போனால் எனக்கென்று தனிப்பெயர் ஒன்றும் கிடையாது. உங்களால் புறக் கணிக்கப்பட்டாலும், நான் உங்களுடனேயே இருப்பேன். என் பார்வையில் ஒருவர் கூட நார்த்திகர் கிடையாது. எல்லோருமே இறைவனால், இறைவனுக்காக இருந்து கொண்டிருப்பவர்கள் தாம். சூரியன் இல்லை என்று சொன்னால் சூரியன் மறைந்து விடுவதில்லை.

★ அவன் அருளில் நம்பிக்கை கொள்ளுங்கள், எளியோருக்குச் சேவை செய்வதும், இறைவனின் சக்தி, பெருமை இவற்றில் திளைப்பதுமான நன்னெறிகளோடு கூடிய வாழ்க்கை நடத்துங்கள். உங்கள் கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டிப் பிரார்த்தியுங்கள். கட்டாயம் உங்கள் பிரார்த்தனைக்கு கடவுள் செவி சாய்ப்பார். இறைவனைப்பற்றிய எண்ணங்களில் நீங்கள் காலத்தைக் கழிக்கும் பொழுது , கெடுதலான வழிகளில் போவதிலிருந்து நீங்கள் விடுபடுகிறீர்கள். மற்றவர்களுக்கு எந்த வழியிலும் கெடுதல் செய்யவோ மற்றவர்களை தூற்றுவதற்கோ உங்களுக்கு சபலம் எழாது, வாழ்க்கையின் எல்லா சம்பவங்களையும் அவன் பரிசுகளாக ஏற்றுக் கொண்டு அன்பிலேயே வாழ்வீர்கள்

★ உங்களுக்குத் தெரிந்த, உங்களிடத்தில் இல்லாத தவறுகள் பற்றி மற்றோர் எது சொன்னாலும் பொருட்படுத்தாதீர்கள், உங்களிடமுள்ள தவறுகளை, மற்றோர் உங்களுக்கு சுட்டிக் காட்டுவதற்கு முன்பே, சரி செய்து விட முயலுங்கள். உங்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்கள் மீது கோபமும், பழிவாங்கும் எண்ணமும் கொள்ளாதீர்கள் - அதற்காகப் பதிலுக்கு அவர்களுடைய தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உங்கள் நண்பர்களுக்கிடையில் விரோதமும், சண்டையும் மூண்டால், இவைகளை அதிகப் படுத்த முயலாதீர்கள், பிரியத்தோடும் அனுதாபத்தோடும் பழைய படி அவர்கள் நண்பர்களாயிருக்கச் செய்யவே முயலுங்கள்.

★ இறைவனை மறந்து வாடியுள்ள மக்கள் மீது நாம் ஸங்கீர்த்தன கிரணங்களைப் பொழிந்து அவர்களைத் தாமரையாக மலர்வியுங்கள். பகவத்தநுபவத்துக்கு மேம்பட்ட நலன் ஏதுவுமில்லை. இதற்கு உதவுவதை விடப் பெரிய சமூக சேவை ஏதுவுமில்லை. அன்னதானம், வித்யா தானம், வஸ்திரதானம், பிணி தீர்த்தல் யாவும் நல்லவை தாம். முடிந்த அளவில் அனைவரும் இவற்றைச் செய்ய வேண்டும். ஆயினும் இவற்றால் பலன் அடைபவரின் உள்ளம் உயர்ந்தாலன்றி இவையும் வீண் தான். ஆகையால் பக்தியைப் பரப்புவதை விடப் பெரிய பரோபகாரம் இல்லை.

★ நான் எப்போதும், எப்போதும், எப்போதும் உங்களுடனேயே இருக்கிறேன். உங்களுக்கும் எனக்குமுள்ள இடைவெளி உங்கள் கற்பனையே.

★ ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடங்குங்கள். அன்பில் செலவழியுங்கள் - அன்போடு முடியுங்கள். ஒவ்வொரு நாளையும் அன்பால் முழுக்கடியுங்கள். இதுவே பகவானிடம் கொண்டு சேர்க்கும் வழி.

★ வேதங்களில் கூறப்பட்டுள்ள பிரபஞ்சப் பிரேமையின் பராமரிப்போடு கூடிய பாதுகாப்பின் கீழ் உலக மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்க முடிவு செய்திருக்கிறேன். ஏனெனில் இந்த உலகம் என் அரண்மனை. ஒவ்வொரு கண்டமும் அந்த அரண்மனையில் கூடம். பொய்மை தோல்வியுறும். உண்மை வெல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஒரே இரத்தம் உடலின் பல பாகங்களுக்கும், எல்லா அவயவங்களுக்கும் ஓடி, அவைகளைப் போஷிப்பது போல, ஒரே தெய்வீகத் தத்துவம் தான் பிரபஞ்சம் முழுவதையும் இயக்குகிறது. வாழ்க்கை என்னும், களைப்பை உண்டு பண்ணும் குழப்பத்தில் மூழ்கி, இறைவனை அசட்டை செய்யாதே! தனிமனிதனின் வித்தியாசங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காதே! சகல உயிர்ப் பொருட்களும் ஒன்றோடொன்று உறவு கொண்டவை.

★ நான் எல்லோருடையவும் சேவகன். என்னை எந்தப் பெயருடனும் அழைக்கலாம். நான் விடை தருவேன் ஏனெனில் எல்லா நாமங்களும் என்னுடையவையே....! நீங்கள் என்னை ஒதுக்கினாலும் நான் உங்கள் பின்னால் இருப்பேன். ஒரு இந்து நல்ல இந்துவாக மாறவேண்டும், ஒரு கிறிஸ்தவன் நல்ல கிறிஸ்தவனாக மாற வேண்டும். இதே போல் எல்லா மதத்தவர்களும்....... நீங்கள் செல்லுகின்ற பாதையைச் சீர் செய்து சரியான வழியில் அழைத்துச் செல்லவே நான் வந்துள்ளேன். (சாயிபாபா)

★ உங்களை நான் கவனிக்வில்லை என்பதாலோ, நீங்கள் விரும்பும் படியே பணம், பதவி ஆரோக்கியம் சௌகரியம் முதலியவற்றைத் தராததாலோ, ஸ்வாமி அலட்சியம் செய்கிறார் என்று எண்ணாதீர்கள். உங்களிடம் ஸ்வாமிக்கு உள்ள உண்மையான கவலை உங்களுக்குத் தெரியாது. ஆனால் ஸ்வாமி உங்களை பணக்காரராக, பதவிக்காரராக, பாலிஷ்டராக, பவிசுள்ளவராக ஆக்குவதில் கவலை கொண்டிருக்கவில்லை. உங்கள் சித்தத்தை சுத்தம் செய்து உங்களை உய்விப்பதிலேயே கவலை கொண்டிருக்கிறேன்.

★ என்னிடம் அஞ்ச வேண்டாம் - தயங்கவும் வேண்டாம். என்னிடம் உங்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு. எனவே அன்போடு வந்து கேளுங்கள். தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பக்திமார்க்கமும் பிரம்மத்தை அதுவாகவே ஆகி அனுபவிக்கும் ஞானத்தில் கொண்டு சேர்க்கும். பக்தன் இந்த பிரம்ம ஞானத்துக்கு ஆசைப்படா விட்டாலும் கூட பகவானே அதை அவனுக்கு அனுக்கிரகித்து விடுவார்.

★ அன்பு சேவை மூலம் வெளிக்காட்டப்படுகிறது. சேவை மூலம் அன்பு வளர்கிறது. சேவையிலிருந்து அன்பு பிறக்கிறது.

★ எனக்கு ஒரு வேலை இருக்கிறது. மனித குலம் முழுவதையும் பேணுவதும் அவர்களது வாழ்க்கை முழுவதும் ஆனந்தம் நிறைந்து காணுமாறு நிச்சயப்படுத்துவதுமே. எனக்கு பிரக்ஞை உண்டு. நேர் பாதையில் இருந்து விலகிச் செல்லும் எல்லோரையும் மீளவும் நல்வழிக்கு இட்டுச் செல்வதும், பாதுகாப்பதுமே என்னிடம் பற்றுக் கொண்டவர்களை நான் ஒரு போதும் கை விடமாட்டேன்.

(பாபா 21 ஆவது வயதில் அவரது தமையன் சேஷராஜுவுக்கு எழுதிய கடிதம்)

★ உங்கள் இதயங்களில் அன்பு என்னும் விளக்கை ஏற்றி வைக்க வந்திருக்கிறேன். நாளொரு வண்ணம் ஒளி பெருக்கி அந்த விளக்கைப் பிரகாசிக்கப் பண்ண வந்திருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட சமயத்தின் சார்பில் பேசுவதற்கு நான் வரவில்லை. ஒரு பிரத்தியேகமான கூட்டத்தினருக்கோ, நம்பிக்கைக்கோ, கொள்கைக்கோ, பிரசாரம் செய்யும் பணியில் நான் வரவில்லை. ஒருமைத்தத்துவம், நம்பிக்கை ஆன்மீகதத்துவம், அன்பு, மார்க்கம், இந்த அன்பின் மேன்மை, அன்பெனனும் பணி, அன்பு செய்யும் கடமை இவைகளைப் பற்றியே நான் சொல்ல வந்திருக்கிறேன்.

*சாயிராம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவதார நோக்கம்:-

மனிதனிலே கடவுளை உருப்பெறச்செய்ய கடவுள் மனித வடிவத்தை எடுக்கவேண்டியது தான் ஒரேயொரு வழி. மனித இனம் கடவுளோடு நெருக்கம் பெறவேண்டுமென்று, அவதார புருடர் மனித வடிவமெடுத்து மனித ரீதியிலே பழகுகிறார். அதேவேளையில், அவர் தெய்வ நிலைக்கு உயர்ந்து, மனிதன் தெய்வத்துவத்தை அடையவும் வழிவகுக்கிறார். அவதாரங்கள் மனித வடிவில் வருவது, எமக்குள்ளே இருக்கும் இறைவனே எம்மை இயக்குகிறார் என்பதைப் புரியவைக்கவே. முன்னைய அவதாரங்களான இராமர், கிருஷ்ணர் போன்றோர், தெய்வீக வாழ்வு முறைக்குப் பகைவர்கள் என இனங்காணப்பட்ட ஒருசிலரை அழித்து, அதன்மூலமாக தர்ம மார்க்கத்தை நிலைநிறுத்தவேண்டி யிருந்தது. ஆனால் இன்று ஏறக்குறைய எல்லோரையுமே கொடூரம் களங்கப்படுத்திவிட்டது.

இன்று ஒரு உலகப்போர் வருமாயின் அணுவாயுதப் பிரயோகத்தில் மனிதவர்க்கம் முழுவதுமே அழியவேண்டிய ஆபத்தில் உள்ளது. அந்தளவுக்குத் தீமை குடிகொண்டுவிட்டது. தற்சமயம், கோபம், வெறுப்பு, வன்முறை, யுத்தம் ஆகியவற்றிற்கு உட்பட்டிருக்கும் உணர்விலிருந்து, மனிதனை உயர்ந்த உணர்வுகளக்குக் கொண்டுவந்து உலகினைப் பேராபத்திினின்றும் காப்பாற்றவும், ஏழையோ பணக்காறனோ எல்லோருமே விரும்புகின்ற மனச்சாந்தியை அடையும் வழியைக் காட்டுவதற்கும், நாம் எல்லோரும் ஒரே தெய்வத்துவத்தைச் சார்ந்தவர்கள், ஒவ்வொருவரிலும் ஒரு சிறிய பொறியாக இருக்கின்ற தெய்வத்துவமானது இந்த அவதாரத்தில் முழுச் சுடராய் இருக்கிறது. ஒவ்வொருவரிலும் உள்ள கடவுட் பொறியை, முழுமையான தெய்வீகச் சுடராய் மலரச் செய்யவுமே இந்த அவதாரம் அவதரித்துள்ளது.

*- பாபா -*

**ஆதாரம்:-** **1976ல் பத்திரிகை ஆசிரியர் திரு. R. K. கரன்ஜியாவிற்கும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்களுக்குமிடையில் நடந்த சம்பாஷணையின் தமிழாக்கம். 'சுவாமியுடன் ஒரு சம்பாஷணை'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயிராம்

# காயத்ரீ மந்திரம்

**ஓம்**
**பூர் புவஸ் ஸுவ:**
**தத் ஸவிதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோ ந: ப்ரசோதயாத்!!**

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

ஓம் - ஓம், பூ - பூலோகம், புவ - புவர்லோகம், ஸுவ ஸுவர்லோகம், ய - யார், ந - நம்முடைய, திய - அறிவை, ப்ரசோதயாத் - தூண்டுகிறாரோ, தத் அந்த, தேவஸ்ய - சுடருடைய, - ஸவீது - கடவுளின் வரேண்யம் - மேலான, பர்க் ஒளியை, தீமஹி - தியானிப்போமாக.

***ஓம் சாந்தி*** ***சாந்தி*** ***சாந்தி***

ஆதாரம்: "காயத்ரீ" - ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

★★★★

## வாயை மூடி இதயத்தைத் திற

கடவுள் பத்திரிநாத்திலோ, சேதார் நாத்திலோ, திருப்பதியிலோ இல்லை. இறைவன் முதலில் உன் "ஹிருதய வாசி" என்பதை புரிந்துகொள். உன் இதயத்திலேயே இருக்கிறான். அதனால் முதலில் பேச்சை நிறுத்தி இதயத்தினுள் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும். இந்நாளைய மனிதன் அமைதியின்மைக்குக் காரணம் இதயத்தை மூடித் தாளிட்டு விட்டு, வாயைத் திறந்து அதிகமாகப் பேசுகின்றான். வாயை மூடு இதயத்தை திற அப்போதே ஆனந்தம் கிடைக்க வழி, ஆத்மஞானம் கிடைக்கவும் இதுவே வழி.

தை 1997 சனாதன சாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னும் - பின்னும்

## சமரசவழி

மனித இனத்துக்கு எதிர்காலம் இல்லாவிடில், சாயி பாபாவின் வழி ஒன்றே அதற்கு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியது. ஒவ்வொருவரும் மதத்தைப் பின் பற்றும் போதே, தம் மதம் தமக்கு எப்படியோ, அப்படியே மற்ற மதங்கள் அதைப் பின்பற்றுபவர்களுக்கு உகந்தது என்ற உணர்வோடு இருக்க வேண்டும். எல்லா மதங்களும் சமமான சிறப்புடையவை என்பதற்கு பாபாவே சான்றாகிறார் எண்ணற்ற பழமையில் ஊறிய முஸ்லிம்களும், எண்ணற்ற வைதீக இந்துக்களும் அவர் காட்டிய வழியில் நடந்து, ஆத்மீகப் பரிபூரணத்தை அடைந்திருக்கிறார்கள். உலகிலுள்ள மதங்களில் எதுவும் மோசமானதோ அல்லது குறையுள்ளதோ, அல்ல. ஆனால் அவற்றைப் பின்பற்றுபவர்களின் குறுகிய வெறியார்வமுடைய மனப்பான்மைகள், மற்றவர்களைச் சகித்துக் கொள்ளும் பண்பின்மை, தன்னுடையதே சரி என்னும் பிடிவாதம் ஆகிய இவையே கெடுதலானவை. மற்றவர்களுக்கு மட்டு மல்ல அவர்களுக்கும் அது கெடுதலைத் தரக்கூடியதே. சகிப்புத் தன்மை இன்மையும், பகைமையுமே அழிவின் மூல காரணங்கள். தன் மதத்திற்குரிய கடவுளே உலகைப்படைத்தவர் என்று கூறும். மனிதன் மற்றவர்களை வெறுப்பது ஏனோ? கற்கால மனிதனின் விலங்கியல்புகள், இன்னும் மனித இனத்தை விட்டு நீங்காதிருப்பது மேற்கூறிய அறிகுறிகளாகும். இத் தீமைகளை விலக்கி விட்டால், எல்லா மதங்களும் எதிர்காலத்தில் மனித இனத்தை மேன்மையுறச் செய்வதற்குரிய ஒரே விதமான திட்டங்களாகும். பார்ப்பதற்கு கண்களும், கேட்பதற்கு செவிகளும் உள்ளவர் எவரும் இதை உணராமல் இருக்க முடியாது. எனவே, பாபா ஒவ்வொருவரையும் தமது சொந்த வழியை (நமது மதத்தை) பின்பற்றும் படி ஊக்குவித்து. ஒவ்வொருவரையும் படுகுழிகளில் விழுவதிலிருந்து காப்பாற்றுகிறார்.


*ஓம் ஸ்ரீ சாயிராம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் உள்ளது!

ஒரே மதம் - அதுவே அன்பெனும் மதம்
ஒரே ஜாதி - அதுவே மானிட ஜாதி
ஒரே பாஷை - அதுவே இதய பாஷை
ஒரே கடவுள் - அவர் எங்கும் நிறைந்தவர்



## THERE IS ONLY ONE!

CASTE - The Caste of Humanity
RELIGION - The Religion of Love
LANGUAGE - The Language of the Heart
GOD - Who is Omnipresent

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org